21.08.2025

O.S.No. 401/2019

PW2– சண்முகத்தேவர்– த/பெ. ஆதிமூலத்தேவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 21.08.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. நான் இறந்துபோன 1ம் வாதிக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 2ம் வாதி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு எந்த அழைப்பாணையும் வரவில்லை என்றால் சரிதான்.

2. 1ம் வாதி வகையறாவிற்கு தாவா சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டது. வாதிகளுக்கு சொந்தமான தாவா சொத்து புல எண்.480/29 உள்ளது. எனது சொத்து புல எண்.480ன் கீழ்பகுதியில் உள்ளது. வாதியின் வகையறாவிற்கு புல எண்.480/29ல் 6 1/2 செண்ட் கையிருப்பு உள்ளது. முதலில் புல எண்.480/29 மொத்தம் 12 ½ செண்ட் இருந்தது, அதில் 6 செண்ட் கொடுத்ததுபோக மீதம் 6 ½ செண்ட் உள்ளது.

3. புல எண்.480ல் எத்தனை உட்பிரிவுகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் யார் பெயரில் பட்டா இருந்தது என்று எனக்கு தெரியாது, சங்கரப்பாண்டியத்தேவர் தந்தையிடம் அனுபவம் இருந்தது எனக்கு தெரியும். முதல்விசாணை வாக்குமூலத்தில் 1,2 வாதிகளுக்கு அருணகிரிதேவர் ஏற்பாடு ஆவணம் எழுதிக்கொடுத்தவிவரம் எனக்கு தெரியாது. நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. நான் வாதியின் குடும்பத்தில் நடைபெற்ற எந்த

ஆவணப்பரிமாற்றத்திலும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. எனக்கு வாதியின் குடும்பத்தில் நடைபெற்ற ஆவணவிவரம் தெரியாது.

4. புல எண்.480/29ல் வாதிகளுக்கு கையிருப்பு நிலம் எந்த திசையில் உள்ளது என்று எனக்கு தெரியாது.

நீதிமன்ற கேள்வி – முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. நான் கையொப்பம் எதுவும் போடவில்லை, எனக்கு படித்துகாட்டவுமில்லை.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.